இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,511 — JULY 5, 1912.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws made by the Local Board of Health and Improvement, Batticaloa.]

1901 ம் ஆண்டின் 2 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்து D டாப்பின் XIII. ம் அதிகாரம் 1 ம் பிரமாணத்துக்குப் பதிலாக 1898 ம் ஆண்டின் ஸ்தான சங்கக் கட்டளைச்சட்டத்து 56 ம் பிரிவின் (21) கீழ்ப்பிரிவின் பிரகாரம் மட்டுக்களப்பு சவுக்கிய சீர்திருத்தச் சங்கத்தாற் செயயப்பட்ட பின்வரும் துணைப்பிரமாணங்கள் இலங்கை அதிகார மந்திரசபையாரது ஆலோசனையோடு மகோத்தம தேசாதிபதியவர்களால் திடப்படுத்தப்பட்டு இத்தால் பிரசித்தம்பண்ணப்படுகின்றது.

மகோத்தம ரவர்களின் கட்டளைப்படி,

ஹியூ. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1912 ம் ஹு ஆடிமீ 1 ந உ.

## துணைப்பிரமாணங்கள்.

(a) மட்டுக்களப்பு ஸ்தான சங்க எல்லைகளுக்குட்பட்ட நிலங்களின் சொந்தக்காறர் அல்லது அந்த நிலங்களைக் குத்தகைக் கொடுத்தவர்கள் அல்லது அவைகளிற் குடியிருப்பவர்கள் சகலரும் அவைகளைத் துப்பரவாய் வைத்திருப்பதுடன், அவைகளில் சுகக்குறைவை உண்டாக்குவதற்கான பற்றை செடிகள் முதலியவைக ளில்லாதபடி துப்பரவுசெய்வதோடு அவைகளில் கூழம் குப்பை யில்லாதபடியும் தண்ணீர் தங்கினின்று நுளம்பை உண்டாக்கக்கூடிய பாத்திரங்கள் அல்லது ஏனங்கள் சகலதும் இல்லாதபடியும் துப்பரவாக்க வேண்டும்.

(b) எந்த வளவு அல்லது நிலத்தின் சொந்தக்காறனாவது அல்லது அவைகளிற் குடியிருப்பவனாவது அவைகளிலிருந்து ஒரு கூட்டம் மூங்கிலை அல்லது அதிலொரு பகுதியை வெட்டியெடுக்க வேண்டியதாயிருந்தால், கிண்டி வேர்களைப் பிடுங்கவேண்டும், அல்லது மற்றவர்களைக்கொண்டு அவ்விதம் பிடுங்குவிக்க வேண்டும். அல்லது அதைச் சுற்றிவரவுள்ள நிலத்துக்கு ஓர் மட்டுக்குத் தாள்வாக அதை வெட்டி யெடுக்கவேண்டும், அல்லது வெட்டுவித்து எடுக்கவேண்டும். அப்படிச் செய்தபின் வெட்டுப்பட்டு நிலத்தில் மிச்சமாய் விடப்பட்டிருக்கும் மூங்கிலின் குளல்களில் தண்ணீர் தங்கியில்லாதபடி வேர்களை மூடவேண்டும் அல்லது மூடுவிக்கவேண்டும்.

---

[By-laws made by the Local Board of Bandarawela, relating to Eating-houses, Tea or Coffee Boutiques.]

## தீன்கடைகளையும் தேய் கோப்பிக் கடைகளையும்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

1. தீன் அல்லது தேய் கோப்பிக் கடைகளிலுள்ள கருவிகள் தட்டுமுட்டுச்சாமான்கள் அல்லது அங்கே பாவிக்கப்படும் பதார்த்தங்களெல்லாம் சுத்தமாய் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. மேற்சொல்லிய கடைகளின் சுவர்கள் வச்சிரத்துலமாக சாந்து பூசப்பட்டும் சுண்ணம்பால் வெள்ளையடிக்கப்பட்டும் அறைகளும் நல்ல வெளிச்சமும் காற்றுமுள்ளவையுமா யிருககவேண்டும்.

3. இக்கடைகளில் அல்லது அவைகளைச்சுற்றிய விடங்களிலிருக்கும் குப்பை அழுக்கு, முதலியவை யெல்லாம் நாளொன்றுக்கு இருமுறை பெருக்கித்தள்ளப்பட வேண்டும்.

4. இக்கடைகளில் தொற்று நோயாளராவது அல்லது அருவருப்புள்ள நோயாளிகளாவது அப்படி நோயாளரைச் சிறிது நேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குளித்துச் சரீரம் கழுவாதவர்களாவது அசுத்தர்களாவது வேலை செய்யாதிருத்தல் வேண்டும்.

5. இக்கடைகளில் பாவிக்கப்படும் சீனி கண்ணாடி மூடி போடப்பட்டதுமான போத்தல்களில் வைத்து இருக்கப்பட வேண்டும்.

6. விற்பனவுக்காக வைக்கப்பட்ட உறட்டிகளும் மற்றுஞ் சீனிசேர்ந்த பணியாரங்களும் இலையான் முட்டாதபடி கண்ணாடியால் மூடப்பட்ட ஏதனங்களில் வைத்திருக்கப்படவேண்டும். இவ்வேதனங்கள் நல்ல துப்பரவாய் வைத்திருக்கப்படவேண்டும்.

7. வடித்து மிஞ்சிய தேய், கோப்பி, பால், அல்லது மிஞ்சிய தீன், அல்லது குசனி ஊத்தைகள் நிலத்தில் வீசப்படாமல் நல்ல ஏதனத்தில் வைக்கப்பட்டு நாள்தோறும் அகற்றப்படவேண்டும்.

8. இத்துணைப்பிரமாணங்கள் அடங்கிய காகிதம் சட்டம் போடப்பட்டு மேற்சொல்லிய தீன், தேய், கோப்பிக் கடைகள் ஒவ்வொன்றிலும் ஓர் பிரசித்தமான இடத்தில் தூக்கப்பட்டிருக்கவேண்டும்.

---

[By-laws made by the Local Board of Badulla, relating to Eating-houses, Tea or Coffee Boutiques.]

## தீன்கடைகளையும் தேய் கோப்பி கடைகளையும்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

1. தீன் அல்லது தேய் கோப்பிக்கடைகளிலுள்ள கருவிகள் தட்டுமுட்டுச் சாமான்கள் அல்லது அங்கே பாவிக்கப்படும் பதார்த்தங்களெல்லாம் சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

2. மேற்சொல்லிய கடைகளில் சுவர்கள் வச்சிரத்துலமாக சாந்து பூசப்பட்டும் சுண்ணம்பால் வெள்ளை யடிக்கப்பட்டும் அரைகளும் நல்ல வெளிச்சமும் காற்றுமுள்ளவைகளாய் யிருக்கவேண்டும்.

3. இக்கடைகளில் அல்லது அவைகளைச்சுற்றிய விடங்களிலிருக்கும் குப்பை அழுக்கு முதலியவை யெல்லாம் நாளொன்றுக்கு இருமுறை பெருக்கித் தள்ளப்பட வேண்டும்.

4. இக்கடைகளில் தொற்றுநோயாளராவது அல்லது அருவருப்புள்ள நோயாளிகளாவது அப்படி நோயாளரைச் சிறுதுநேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குழித்துச் சீரம் கழுவாதவர்களாவது அசுத்தர்களாவது வேலை செய்யாதிருத்தல் வேண்டும்.

5. இக்கடைகளில் பாவிக்கப்படும் சீனி கண்ணாடிமூடி போடப்பட்டதுமான போத்தல்களில் வைய்த்து இருக்கப் படவேண்டும்.

6. விற்பனவுக்காக வைக்கப்பட்ட உறட்டிகளும் மற்றும் சீனிசேர்ந்த பணியாரங்களும் இலையான் முட்டாதபடி கண்ணாடியால் மூடப்பட்ட ஏதனங்களில் வைய்த்து இருக்கப்பட வேண்டும். இவ்வேதனங்கள் நல்ல துப்பரவாய் வைய்த்திருக்கப்பட வேண்டும்.

7. வடித்து மிஞ்சிய தேய், கோப்பி, பால், அல்லது மிஞ்சிய தீன், அல்லது குசனி ஊத்தைகள் நிலத்தில் வீசப்படாமல் நல்ல ஏதனத்தில் வைய்க்கப்பட்டு நாள்தோறும் அகற்றப்பட வேண்டும்.

8. இத்துணைப்பிரமாணங்கள் அடங்கிய காயிதம் சட்டம் போடப்பட்டு மேற்சொல்லிய தீன் தேய் கோப்பிக் கடைகள் ஒவ்வொன்றிலும் ஓர் பிரசித்தமான இடத்தில் தூக்கப்பட்டிருக்க வேண்டும்.

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 668, N. P.**—1912 ம் ஆண்டு ஆவணிமீ 6 ந் திகதி, 11 மணியளவில், தன் ஆபிசில், வட மாகாணத்து கவர்ண மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவு பண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது உரித்துமுடிவுப்பண்ணப்படும். 4 காணித் துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் பச்சிலைப்பளிப் பகுதியி லிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | ஏக்கரொன்றின் பாணிப்பு விலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,907. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 715 | சங்கத்தாவயல் .. | ரி. பொன்னையா .. | தென்னம்பிள்ளைக்குத் தக்க .. | 3 | 1 | 24 | .. 17 |
| | | பிளான் இலக்கம் 3,929. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 889 | ஷை .. | ஜேகொப் தொம்சன் பாதிரியார் | தென்னம்பிள்ளைக் குத்தக்க .. | 112 | 3 | 38 | .. 21* |
| 890 | ஷை .. | ரேட்டுக்கு விடப்பட்ட நிலம் .. | காடு .. | 1 | 3 | 6 | .. — |
| | | பிளான் இலக்கம் 3,909. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 718 | புலோப்பளை .. | எம். சந்தியர .. | தென்னம்பிள்ளைக் குத்தக்க .. | 11 | 2 | 35 | .. .. 26·50 |

* இந்தக் கண்டம் ஆனையிறவுவாடியிலிருந்து வடக்குப்புரமாக இரண்டு கட்டை தூரத்திலிருக்கிறது.

இந்தக் காணிகளின் மேலதிக விபரங்கள் வடமாகாண கவுண்மேந்து ஏசன்றுத்துரையவர்களிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரை அவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1912 ம் ௵ ஜூன்மீ 20 ந் திகதி.

ஹியு கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிறத்தார்.

---

**No. 669, N. P.**—1912 ம் ஆண்டு ஆவணிமாதம் 13 ந் திகதி, செவ்வாய்க்கிழமை காலமே 11 மணியளவில், தன் ஆபிசில் வட மாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் விற்கப்படும் அல்லது உரித்து முடிவுசெய்யப்படும். 5 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வலிகாமம் கிழக்கு முதலிய பகுதியிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கருக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலககம் 3,920. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 875 | கரவெட்டி .. | சீமாா் அந்தோணி .. | நெற்செய்கைக்குத் தக்க .. | 3 | 1 | 20 | .. 62·50 |
| | | பிளான் இலக்கம் 1,047. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| $3477\frac{1}{2}$ | கரையூர் .. | கிறிஸ்தவவாலிபச்சங்கம் .. | கட்டிடத்துக்கு தகுந்த நிலம் .. | 0 | 2 | 6·50 | .. 8,400 |
| | | பிளான் இலக்கம் 3,866. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 614 | தும்பளை .. | எம். கந்தன் .. | குவாளை யென்னும் காணி .. | 0 | 0 | 10 | .. 50 |
| 615 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 11 | .. 50 |
| | | பிளான் இலக்கம் 3,839. உரித்தாளி—அரசாட்சி. | | | | | |
| 535 | மட்டுவில் நாடு .. | என். மூத்ததம்பி .. | தென்னம்பிள்ளைக்கு தகுந்த நிலம் .. | 51 | 3 | 30 | .. 47·50* |

* இந்தக் கண்டம் பூனகரி வாடிவீட்டிலிருந்து தென்மேற்கு மூலையாக கால்கட்டை தூரத்திலிருக்கிறது.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணம் கவுண்மேந்து ஏசன்றுத்துரை அவர்களிடத்திலும் படங்களைப்பற்றி அளவு கந்தோரின் பெரியதுரையிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1912 ம் வருஷம் ஜூன்மீ 27 ந் உ.

ஹியூ. கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேள்லைவக்காகிய காணி விளம்பரங்கள்.

[Chilaw.]

1876 ம் வருஷத்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சிலாபத்துக்கு ஆதுரசாலையொன்றுக்கு நிலையத்துற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 4,035. கிராமம்—சிலாபம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| E 39 | மகலயாய | புகையிலைத்தோட்டம் | ஹூடன் பறுணந்து | 0 | 0 | 28 |
| F 39 | ஷை | ஷை | காலஞ்சென்ற நொத்தாரிஸ் பி. மனுவேல் பறுணந்துடைய சுதந்தரர் | 0 | 0 | 12·12 |
| G 39 | ஷை | ஷை | கிளமேந்தி பறுணந்து | 0 | 0 | 36·37 |
| H 39 | ஷை | ஷை | (1) மனுவேல் ரேசாபறுணந்து, (2) ஸ்கொலாஸ்த்திக்கா பறுணந்து | 0 | 0 | 18·87 |
| I 39 | ஷை | காய்கனித்தோட்டம் | வா. நெ. சேகுதம்பியும் மற்றவர்களும் | 0 | 1 | 18·50 |
| J 39 | ஷை | புகையிலைத்தோட்டம் | (1) எஸ். ஏ. சில்வா, (2) ஜே. ஜோன் பறுணந்து, (3) ஜே. றிச்சேட் இம்மனுவேல் பறுணந்து | 0 | 3 | 12·25 |
| K 39 | பள்ளிவாசல் | ஷை | அவுலியா | 0 | 0 | 0·57 |
| L 39 | மகல்யாய | ஷை | (1) எல். ஜுவான் பறுணந்து, (2) மனுவேல் ஜுலியன் பின்ரோ, (3) என். அந்தோனி பறுணந்து | 0 | 0 | 9·50 |
| M 39 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 0·37 |
| P 39 | ஷை | ஷை | மிஸ்றர் என். ஜே. மாட்டின் | 0 | 0 | 1·62 |
| S 39 | | ஷை | காலஞ்சென்ற ரீ. எம். நூர்டினுடைய சுதந்தரர் | 0 | 0 | 0·75 |
| T 39 | ஷை | ஷை | ஷை | 1 | 1 | 16·50 |
| U 39 | மிஸ்ரெஸ் லெம்பருடைய காணி | தென்னந்தோட்டம் | மிஸ்ரர் என். ஜே. மாட்டின் | 0 | 0 | 13·75 |
| N 39 | மகல்யாய | புகையிலைத்தோட்டம் | (1) எல். ஜே. பறுணந்து, (2) எம். ஜே. பின்ரோ, (3) என். ஏ. பறுணந்து | 0 | 0 | 16·62 |
| O 39 | ஷை | ஷை | மிஸ்ரர் என். ஜே. மாட்டின் | 0 | 0 | 23·25 |
| Q 39 | ஷை | ஷை | காலஞ்சென்ற ரீ. எம். நூர்டினுடைய சுதந்தரர் | 0 | 0 | 9·75 |
| R 39 | ஷை | ஷை | ஷை | 0 | 1 | 18·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ம் ஸு ஆவணிமாசம் 3 ந் தேதியிலன்று மாலை 1 மணிக்கு சிலாபத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1912 ம் ஸு ஆனிமாதம் 15 ந் உ.

ஜே. கொன்ரோய்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

[Madampe, Puttalam District.]

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த சந்தை வீடொன்றுசெய்ய என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,957. குறிச்சி—மாதம்பை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| R 19 | நுகக்காவத்த | தென்னந்தோட்டம் | சல்மான் அப்பு | 0 | 0 | 4·62 |
| S 19 | ஷை | சுதேசிதோட்டம் | மாதம்பை கோயிற்காக வந்தனை ஜோன் பெரேரா | 0 | 1 | 7 |
| 458 | கக்கூசு | சிங்மேய்ந்த கட்டடம் | முடி | 0 | 0 | 0·37 |
| T 19 | கடை | ஓட்டுவீடு | மாதம்பை கோயிலுக்காக வந்தனை ஜோன் பெரேரா | 0 | 0 | 3·37 |
| U 19 | மீன்கடை | ஷை | ஷை | 0 | 0 | 9·12 |
| V 19 | அப்பக்கடை | ஷை | ஷை | 0 | 0 | 0·62 |
| W 19 | அப்பஞ்சுடும் வீடு | ஷை | ஷை | 0 | 0 | 3·75 |
| X 19 | கடை | ஓலையும் ஓடும் மேய்ந்தவீடு | ஷை | 0 | 0 | 1·25 |
| Y 19 | அப்பஞ்சுடும் வீடு | ஓலைமேய்ந்த வீடு | ஷை | 0 | 0 | 2·37 |
| Z 19 | குடில் | ஓலைக்குடில் | ஷை | 0 | 0 | 0·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ம் ஸு ஆவணிமாசம் 3 ந் தேதியிலன்று 1 மணிக்கு சலாபத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1912 ம் ஸு ஆனிமீ 15 ந் உ.

ஜே. கொன்ரோய்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

[Minnana, Ratnapura District.]

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இரத்தினபுரிக்கு றெயில்வே திறப்பதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 2,213. குறிச்சி—மினைன.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 0 15 | மறக்காவத்தை | தோட்டம் | டோனுமடலெனகாமியும் மற்றவர்களும் | 0 2 30 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக்காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1912 ம் ஞு ஆவணிமாசம் 6 ந்தேதியிலன்று 2 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1912 ம் ஞு ஆனிமீ 27 ந உ.

ஈ. பி. அலெக்சான்டர்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Tenders for provisioning Kanatta Infectious Diseases Hospital.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுபத்திரிக்கு கொந்திருத்து ஏற்றுக்கொள்ளப்படும் திகதி தொடக்கம் 1913 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டு சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "கனத்தை ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதத் வேண்டும். கேள்விக்கடதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1912 ம் ஞு ஆடிமீ 16 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரவேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரீயீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முழுக்க காப்பிடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்கவொண்ணாத அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும். கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ண்மேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) எவ். ஜி. மோரிஸ்,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1912 ம் ஆண்டு ஆனிமீ 26 ந உ.

அட்டவணை.

| இடம். | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை ரூ. | பணப்பிணையின் தொகை ரூ. |
|---|---|---|---|
| கனத்தை தொற்றுநோய் ஆஸ்பத்திரி | சமைத்த சாப்பாடு பாலில்லாமல் | 250 | 500 |

---

[Supreme Court Criminal Sessions for North-Central Province at Kandy.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் வடமத்திய சுற்றோட்டத்தைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1912 ம் ஆண்டு ஆவணிமாதம் 1 ந் திகதியாகிய வியாளக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

அனுராசபுரம் பிஸ்கால் கந்தோர்,
1912 ம் ஞு ஆடிமீ 1 ந உ.

இங்ஙனம்,
பி. பீ. கல்கமுவ,
உப பிஸ்கால்.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.